முஃகர்ரம்1442 | ஆகஸ்ட் 2020

# இமாமின் குரல்

## ஜமாஅத் - நியூஸ் லெட்டர்

### அல்லாஹ்வின் மாபெரும் அத்தாட்சி



அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்படும் போது, நாம் அவர்களுக்காகப் பூமியிலிருந்து கடிக்கும் கிருமியை வெளிப்படுத்துவோம். மக்கள் நம் அடையாளங்களில் நம்பிக்கை கொள்ளாததே அதற்குக் காரணம். ( திருக்குர்ஆன் 27: 83 )

### மனித குலத்திற்கு இறைவன் விடும் எச்சரிக்கை -கொரோனா வைரஸ்

## ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

மலர் 1 இதழ் 2

# இமாமின் குரல்



## இதழின் உள்ளே....




அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்




தஃப்ஸீரே கபீர்




நபி மொழி - ஒரு உயிரோட்டம்



Holy Prophet (pbuh) as a father



தொழுகையில் இன்பம்

### கொ ரோ னா  வை ர ஸ்

உலகின் பல பெரிய நாடுகளையும், மிக சக்திவாய்ந்த நாடுகளையும் தங்களது முழங்கால்களுக்குக் (கீழ்) கொண்டுவந்திருக்கின்ற, இறைவனின் கோபத்திற்க்கு முன் உதவியற்றதாக்கியுள்ள அத்தகையதொரு வைரஸ் (கிருமி) தான் கொரோனா வைரஸ் ஆகும்...

உள்ளே...



# ஆசிரியர் பக்கம்

அன்புள்ள வாசகர்களே,

உங்கள் மீது எல்லாம்வல்ல இறைவனின் சாந்தியும், அருளும், கிருபையும் உங்கள் மீது உண்டாகட்டுமாக.!

நாம் தற்போது வாழ்ந்துக் கொண்டிருக்கும் காலமானது மிகவும் கடினமான காலமாக இருக்கிறது. இருப்பினும், இது ஒருவரின் செயல்களைப் பிரதிபலிப் பதற்கும், அவர் தன்னைதானே சிறந்த முறையில் சீர்திருத்திக்கொள்வதற்கும் உரிய சிறந்த ஒரு காலமாகவுமாக இருக்கிறது. மேலும், இந்த உலகம் அழிவை நோக்கிச் செல் வதாகவும் உள்ளது. அதுவும், துரதிர்ஷ்டவசமாக, இந்த அழிவு என்பது மனிதனின் கைகளினாலேயே கொண்டு வரப்பட்டதாக இருக்கிறது. மேலும், மனிதகுலம் மிகுந்த ஆபத்தில் உள்ளது. அதுவும், இந்த அழிவை மனிதர்களே தங்களுக்குள் கொண்டு வருபவர்களாக இருக்கின்றனர்.

மனித வாழ்க்கை என்பது மிகவும் புனிதமானதாகும். அதாவது, எல்லா மக்களும், குறிப்பாக, எல்லாம் வல்ல இறைவனுடைய உண்மையான நம்பிக்கையாளர்களும், மனிதகுலம் என்பதையும், மனிதகுலத்தின் சாராம்சம் என்பதையும் தங்களுக்குள் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். மேலும், அந்த மனிதகுலத்தை தீய பேச்சுக் களாலும், எண்ணங்களாலும், மற்றும் செயல்களாலும் சிதைப்பது என்பதும் கூடாது.

நாம் இதுபோன்ற ஒரு காலக்கட்டத்தில், அதாவது, இதுபோன்ற ஒரு அருள்மிகுந்த காலக்கட்டத்தில் வாழ்கின்றோம். இதில், அல்லாஹ் (ஸுப்ஹ்) தனது தூதரை ஒரு வழிகாட்டியாகவும், மற்றும் தலைவராகவும் உங்கள் அனைவருக்கும் அனுப்பி யுள்ளான். இருப்பினும், இது ஒரு கடினமான காலமாகவும் இருக்கிறது. இதன்மூலம், மனிதகுலமானது அவனது இறைச் செய்தியையும், மற்றும் அழைப்பையும் கேட்காமல் கவனமற்றதாக இருக்குமேயானால், அது மனித இனத்திற்கு அழிவுக்கு மேல் அழிவை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலும், வானங்கள், மற்றும் பூமியுடையவ ஆட்சியை உடையவனான நமது கொடையாளனுமான, ஒரே இறைவனுமான எல்லாம் வல்ல இறைவனின் ஒரு தூதராக, எனது தாழ்மையான அறிவுரை என்னவென்றால்; நீங்கள் உங்கள் செயல்களிலும், எண்ணங்களிலும் இருக்கும் எல்லா தீமைகளையும் கைவிட்டு விட்டு, அவனிடம் வணக்க வழிபாடுகளைக் கொண்டே திரும்ப வேண்டும் என்பதாகும்.

# ஆசிரியர் பக்கம்

மேலும்,தனித்துவமானவனும்,ஈடுஇணையற்றவனானவனுமான அல்லாஹ்வில் மனிதனுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கட்டத்தில், அவன் தன்னை சீர்திருத்திக் கொள்ளவில்லையென்றால், அவன் தன்னை இழந்துப் போகக்கூடியவனாக ஆகிவிடுகின்றான். அதுமட்டுமன்றி, மனிதகுலம் முழுவதும் விரக்தியடைந்து, காணாமல் போகக்கூடியதாகவும் ஆகிவிடும்.

உலகம் தோன்றிய நாளிலிருந்து, எல்லாம்வல்ல இறைவன் எப்போதும் மக்களை நேரான பாதையில் வழிதடத்தி செல்வதற்கும், மற்றும் அவர்களை தீமைகளையும், அனைத்து தீய வழிகளையும் விட்டு விலக்குவதற்கும் தன்னுடைய தேர்ந்தெடு க்கப்பட்ட தூதர்களை அனுப்புகின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, உண்மையான அறிவை பெற்றிருப்பவர்கள் மட்டுமே, இந்தச் செய்தியை புரிந்துகொள்பவர்களாக இருக்கின்றனர். மேலும், அறிவு, மற்றும் புரிதல் என்பதற்கான ஒளி நுழையும் வகையில், அவன் எல்லா உள்ளங்களையும் திறப்பதற்கும், மற்றும் இதன்மூலம், அவர்கள் ஒரே இயக்கமாக ஒன்றிணைந்து மனித நேயத்தையும், மற்றும் உண்மையான நம்பிக்கையையும் காப்பாற்றுவதற்கும் நான் எல்லாம்வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்த காலக்கட்டம் உண்மையில் ஒரு மிகவும் கடினமான காலக்கட்டமாக உள்ளது. அதாவது, நாம் எல்லா இடங்களிலும், அனைத்து வகையான பேரழிவுகளை காண்கிறோம்: அவை, கொடிய வைரஸ்களாகவும், தொற்றுநோய்களான, கொரோனா வைரஸ் (கோவிட்-19) ஆகவும், அணுசக்தி எழுச்சிகளாகவும், குண்டுகளாகவும், மோதல்களாகவும், விபத்துக்களாகவும், வெள்ளமாகவும், நிலச் சரிவுகளாகவும், காட்டுத்தீயாகவும், நமது பூமி, மற்றும் கடலை அழிக்கும் பெட்ரோல் கசிவுகளாகவும், கடற் கொள்ளையர்களாகவும், போதைப்பொருள் விற்பனையாளர்கள், மற்றும் டீலர்களாகவும், மற்றும் நம்முடைய சமூகம், மற்றும் மனிதனின் நம்பிக்கையையும், மனசாட்சியையும் அழிக்கும் அனைத்து வகையான தீமைகளாகவும் இருக்கின்றன. மேலும், மனிதர்களிடையே மனிதநேயம் என்பது நாளுக்கு நாள் அழிந்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு நாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!

மேலும், ஒரே இறைவனாகிய உண்மையான இறைவனிடமிருந்து தோன்றிய அனைத்து மார்க்கங்களும் சமாதாத்தைப் பற்றியே போதிக்கின்றன. இருப்பினும், இந்த சமாதானம் என்பதைப் பாதுகாக்க வேண்டுமெனில், நம்முடைய தீமைகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, உண்மையான இறைவனிடம் முற்றிலுமாக கீழ்படிந்த நிலையிலும் நாம் திரும்பவேண்டும்.

# ஆசிரியர் பக்கம்

மேலும், இந்த கீழ்படிதலையும், இந்த அமைதியையும், இஸ்லாம் மட்டுமே நமக்கு தரமுடியும் என்பதாகும். அதாவது, இஸ்லாமே அந்த மார்க்கமாக உள்ளது. மேலும், எல்லாம்வல்ல இறைவனாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும், உண்மையான வாழ்க்கை முறை என்பதையும் மேம்படுத்த முடியாது.

ஆகவே, அல்லாஹ்வின் தூதர் என்ற முறையிலும், அவன் புறமுருந்து வந்த ஒரு நல்ல ஆலோசகர் என்ற முறையிலும், எல்லாம்வல்ல இறைவனின் ஒப்புதல் முத்திரையைக் கொண்டுள்ள இந்த வாழ்க்கை முறைக்கு உங்களை அழைப்பது என்பதே எனது கடமையாக உள்ளது. மேலும், இஸ்லாத்துடனான ஒரு போலியான தொடர்பினாலும், மற்றும் அதனை சார்ந்ததாலும் மட்டுமல்லாமல், நமது அன்றாட வாழ்க்கையிலும் உண்மை இஸ்லாத்தை உறுதியாக கடைப்பிடிப்பதாகவும், மற்றும் நம்முடைய ஒவ்வொரு செயலிலும், சிந்தனையிலும் இஸ்லாத்தை உள்வாங்கி கொள்வதாகவும் இருந்தால், இது நம்முடைய வாழ்க்கையை பாதுகாக்க முடியும். மேலும், ஒருவர் உண்மையான முஸ்லீமாக இருக்க மனதளவிலும் தயாராக இருந்து, எல்லாம்வல்ல இறைவன் அவரிடமிருந்தோ, அல்லது அவளிடமிருந்தோ என்ன விரும்புகிறானோ, அதற்கேற்ப அவரின் வாழ்க்கையையும் கட்டமைக்க வேண்டும். மேலும், இத்தகைய முறையை, எல்லாமவல்ல இறைவன் தொழுகைகளின் மூலமாகவே சாத்தியமாக்கியுள்ளான். மேலும், தொழுகையே, அத்தகைய ஒரு ஆயுதம் என்பதாகவும் உள்ளது. இதுவே அனைத்து தீய எண்ணங்களையும் வீழ்த்துவதற்கும், மற்றும் எல்லாம்வல்ல இறைவனின் படையை நாளுக்கு நாள் பலப்படுத்தவும் முடியும்.

ஆகவே, உண்மையான ஸஹாபாக்கள் அனைவருக்கும், மற்றும் மனிதகுலம் அனைத்திற்கும் எனது தாழ்மையான அறிவுரை என்னவென்றால், நீங்கள் மனசாட்சியே இல்லாத விலங்குகளாக இல்லாமல், மனதளவில் நல்ல மனிதர் களாகவும் இருக்க வேண்டும். மேலும், நீங்கள் உங்களை நல்ல மனிதர்களாக நிலைநிறுத்திக் கொள்ளும்போது, எல்லாம்வல்ல இறைவனுடைய ஒரு நல்ல அடியாராக இருப்பதன் மூலமாகவும், நீங்கள் உங்களை ஆன்மீக ரீதியாகவும் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். மேலும், உங்கள் பிரார்த்தனைகளில் அவனை நினைவுகூருவதன் மூலமாகவும், மற்றும் மனிதகுலத்திற்கு சேவை செய்வதன் மூலமாகவும், உங்களது நேரத்தை அவனுக்காக அர்ப்பணித்துகொள்ள முடியும். அதாவது, மனிதகுலத்திற்கு செய்யும் சேவையானது எல்லாமவல்ல இறைவனு க்கான சேவையாகும்.

# ஆசிரியர் பக்கம்

ஏனென்றால், இறைவனின் சாராம்சமானது அவனுடைய அனைத்து அடியார்களிடமும் இருக்கிறது. எனவே, நல்லவராக இருங்கள், நல்லவற்றை செய்யுங்கள், நல்லவற்றையும் நினையுங்கள். மேலும், நல்லவராக இருக்கவும் முயற்சி செய்து, கடினமான காலங்களிலும் பொறுமையாக இருங்கள். மேலும், உங்களில் உள் சீர்திருத்தம் என்பது எப்போதும் இருக்க வேண்டும் . நீங்கள் உலகை சீர்திருத்தம் செய்வதற்கு முன்பாக, உங்களுக்குள் சீர்திருத்தத்தை செய்துக்கொள்ளுங்கள். மேலும், நீங்கள் ஒரு நல்ல மனித ராகவும், மற்றும் மனிதகுலத்தின் ஒரு நல்ல பிரதிநிதியாகவும் என்பது இருக்க வேண்டும். அத்துடன், நீங்கள் மனிதாபிமானத்துடனும், ஆன்மீகத் துடனும் என்பதும் இருக்கவேண்டும். இதன்மூலம், இந்த காலத்தின் எல்லாம் வல்ல இறைவனின் கலீஃபாவான, இந்த தாழ்மையான அடியானுடன், நாம் அனைவரும் ஒரு சிறந்த எதிர்காலத்தை நோக்கியும் முன்னேறமுடியும். இது நமக்கானது என்பதாக மட்டுமல்லாமல், எதிர்கால தலைமுறையினரு க்கானது என்பதாகவும், நமது ஆன்மாக்களின் சுய முன்னேற்றத்திற்கானது என்பதாகவும், மற்றும் இம்மை, மற்றும் மறுமையில் நமது முன்னேற்றத்தி ற்கானது என்பதாகவும் உள்ளன.

இன்ஷா-அல்லாஹ், அமீன்.

**முனீர் அஹ்மத் அஸிம்**

**ஜமாஅத்-உல்-ஸஹீஹ்-அல்-இஸ்லாம்**

(மொழியாக்கம் இஃபாஹீமா சாஹிபா அவர்கள்)



# அமீர் பக்கம்

பேரன்பு மிக்க சகோதர சகோதரிகளே ! மாறிவரும் காலச் சூழ்நிலையில் "இது இறுதி காலம்" என்பதில் எந்த மார்க்க அறிஞர்களுக்கிடையிலும் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. அந்த அளவிற்கு பேரிடர்களையும் பேரழிவுகளையும் சந்தித்து வருகிறோம். இதில் உலக வேதங்களில் திருக்குர்ஆனில் மட்டுமே தெள்ளத் தெளிவாக இது போன்ற சம்பவங்கள் ஏன் நடக்கின்றன? யாரை அடையாளம் காட்ட இவ்வாறு நடைபெறுகிறது? என்று தெளிவாக நமக்கு விளக்குகின்றது.

இறை மறையாம் திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்:

*நம் அடையாளங்களை படித்துக் காட்டும் ஒரு தூதரை அவர்களது ஊர்களின் தலைநகரத்தில் எழுப்பாத வரையில் உன் இறைவன் அவற்றை ஒருபோதும் அடிப்பவன் அல்ல. மேலும் அவ்வூர்களில் உள்ள மக்கள் அநீதி இழைப்பர்வர்களாக இருந்தாலன்றி அவற்றை நாம் அடிப்பதில்லை.*(28:60)

மேற்கூறிய திருவசனத்தில் ஓர் இறைத் தூதரை அல்லாஹ் அனுப்பி அவரை மக்கள் நிந்தித்து ஏற்றுக் கொள்ளாத போது தனது தண்டனையை அல்லாஹ் அனுப்புகிறான். என்று தெளிவாகிறது.

ஆகவே, சகோதரர்களே! இப்போது நடக்கின்ற கடினமான காலத்தில் மேற்கண்ட இறை வசனத்திற்கு ஏற்ப ஏதேனும் ஒரு தூதர் இறைவனிடமிருந்து தோன்றியுள்ளார்களா? என்று ஆராய்வது நம் ஒவ்வொருவரின் மீதும் கட்டாய கடமையாகும்:

*ஆதமின் மக்களே! என் வசனங்களையோ உங்களுக்கு ஓதி காட்டக்கூடிய தூதர்கள் உங்களிடமிருந்து நிச்சயமாக உங்களிடம் வரும்போது இறையச்சத்தை மேற்கொண்டு திருந்தி கொள்வோருக்கு (வருங்காலத்தைப்) பற்றிய எவ்வித அச்சமும் ஏற்படாது அவர்கள் (சென்ற காலத்தைப்) பற்றிய கவலை அடைய மாட்டார்கள்.(7:36)*

மேற்கூறிய இறை வசனத்தின் படி, எந்த அந்த தூதரை ஏற்றுக் கொண்டார்களோ அவர்களுக்கு எவ்வித பயமோ கவலையோ அடையத் தேவையில்லை என்று திருக்குர்ஆன் பறைசாற்றுகிறது.

மேற்கண்ட இறை வசனங்களை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தால் ஓர் இறைத்தூதர் இப்போது நம்மோடு வாழ்ந்து வரவேண்டும் என்று கூறி நமக்கு இறைச் செய்தியின் பக்கம் ஆர்வமூட்டுகிறது.
ஆம் சகோதரர்களே! அவர்தான் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட மொரிசியஸ் நாட்டைச் சேர்ந்த *முனீர் அகமது அஸிம் (அலை)* அவர்கள் ஆவார்கள். அன்னார் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் தன்னை ஓர் இறைத்தூதர் என்றும் இறைவனால் அனுப்பப்பட்ட சீர்திருத்தவாதி என்றும் வாதித்து வருகிறார்கள். மேலும் அண்ணார் கடந்த 2001ம் ஆண்டு முதல் உலகில் நிகழவிருக்கும் அனைத்து விடயங்களையும் *கொரோனா வைரஸ்* உட்பட அனைத்து விஷயங்கள் குறித்தும் முன்னறிவித்து விட்டார்கள். அதிலும் குறிப்பாக அந்த இறை வசனத்தின் முன்னறிவிப்பில் தெளிவாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"மக்கள் பிணங்களைப் போல் வீடுகளில் முடங்கிக் கிடப்பார்கள்."* என்று எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு (வஹி) இறைவழிபாட்டின் மூலம் முன்னரே தெரிவித்து விட்டான். இதை நாம் நம் கண் முன்னால் நிதர்சனமாக கண்டுவிட்டோம். எல்லா புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே"

எனவே சகோதரர்களே! மேற்கண்ட நமது கருத்தாக்கங்களை கவனத்தில் கொண்டு இறைவன் பக்கமும் அவனது தூதரின் பக்கமும் கவனம் செலுத்தி இம்மை மறுமையை வெற்றியடைய அன்போடு *ஜமாத்துல் ஸஹீஹுல் இஸ்லாமில்* இணைய அழைக்கிறோம்.

முன்னர் காலம் சென்றவரிகளிடத்து அல்லாஹ்வின் செயல்முறை இதுவே! அல்லாஹ்வின் செயல் முறையில் நீர் எந்த மாற்றத்தையும் உம்மால் ஒருபோதும் காண முடியாது.(33:63)

வஸ்ஸலாம்..

முக்கரம் சிராஜுதீன் சாஹிப்

அமீர் ஜமாஅத் தமிழ்நாடு

ஜமாஅத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்




# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்






**ஹஸ்ரத் கலீபஃத்துல்லாஹ்**

**முனீர் அஹ்மத் அஜீம் (அலை)**

**15th வது நூற்றாண்டின் முஜத்தித்**

**இறைபுரத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் இறைவனிடமிருந்து வஹீயை பெற்று திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கு உண்மையான மற்றும் விரிவான விளக்கத்தை வழங்குகின்றனர்.**

## முன்னுரை:-

இறைவன் தூய்மையானவன், அவனுடைய வார்த்தைகளும் தூய்மையானவை. உலகம் தோன்றிய நாளிலிருந்து, அவன் தன்னுடைய அடியார்களிடம் பேசி வருகின்றான். அவன் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள், மற்றும் தூதர்களிடம், அவர்கள் சாதாரண ஆண்களாக இருந்தாலும், சாதாரண பெண்களாக இருந் தாலும் மிகச் சிறப்பாக பேசிவருகின்றான். அதாவது, போதிப்பவர்களிலெல்லாம் மிக சிறந்தவனான (அல்லாஹ்வின்) பாதுகாப்பின் கீழ், அவர்கள் மிகவும் நல்லொழுக்கமுடையவர்களாக உள்ளனர். அவர்கள் எளிமையான, மற்றும் உன்னதமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். மேலும், அல்லாஹ் அவர்களுடைய நன்மதிப்பை உயர்த்தி, அவர்களுக்கு ஒரு பணியையும் வழங்கி, அவர்களுடன் பேசவும் செய் கின்றான். இது, அல்லாஹ் ஒருவனே (அதாவது, ஏகத்துவத்தை) மக்களிடத்தில் போதிக்கவேண்டும் என்பதாக உள்ளது. மேலும், அல்லாஹ் அனைத்து நபிமார்கள், மற்றும் தூதர்களுக்கிடையே பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களையே நபிமார்களி லெல்லாம் முதன்மையான நபியாகவும், சிறந்த நபியாகவும் மேன்மைப்படுத்தியுள்ளான். நிச்சயமாக, அல்லாஹ்வே அவர்களுக்கு கற்பிப்பவனாகவும், அவர்களின் வழிகாட்டியாகவும் இருக்கின்றான். மேலும், இந்த அசாதாரணமான எளிமையும், ஆழ்ந்த இறைபக்தியும் கொண்ட இந்த ஆன்மீக மனிதர் மூலமாகவே,

# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்

**இறைவன் தன்னுடைய இறுதி வேதத்தை அதனுடைய உண்மையான வடிவில் மறுமை நாள் வரை பாதுகாக்கவேண்டும் என்றும் விரும்புகின்றான். மேலும், அல்லாஹ்வின் இத்தகைய இறைச் சட்டங்களும், புனித வார்த்தைகளுமே புனித திருக்குர்ஆனாக ஆகியுள்ளது.**

**மேலும், ஒருக்காலக்கட்டத்தில் மனிதன் இறைவனின் மீதுள்ள தனது நம்பிக்கை, மற்றும் கடமைப்பை பற்றிய சாராம்சத்தை சிந்திக்காதவாறு, அந்த ஒரே இறைவனை மறந்துவிடவோ, அல்லது அவன்பால் செய்யும் வணக்கத்தை ஒரு சம்பிரதாயப் பழக்கமாக ஆக்கிக்கொள்ளவோ முயலும்போது, அல்லாஹ் இந்த எளியவனான என்னை 'ஈமானை உயிர்பிப்பராக' எழுப்புகின்றான். மேலும், என் காலத்தை சேர்ந்த மக்களுக்கு திருக்குர்ஆனின் உண்மையான சாராம்சத்தையும், மற்றும் விளக்கத்தையும் அறிவுறுத்துவதும் என்னுடைய பணிகளில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான். நிச்சயமாக, இறைவனுடைய வசனங்கள்யாவும் ஒரு எல்லையற்ற ஆன்மீக கடலாக உள்ளது. இதில் அதிகமாக மூழ்குகக்கூடியவர், அவற்றிலிருந்து அதிகமாக இறைஞானத்தின் அழகை ரசித்து உணர்ந்து கொள்ளலாம். மேலும், புனித திருக்குர்ஆனின் விளக்கங்களுக்கு எந்தவொரு முடிவும் கிடையாது என்பதையும் அவர் அறிந்துக் கொள்ளலாம். நிச்சயமாக, இது ஒரு ஞானத்தின் ஊற்றாகும். மேலும், திருக்குர்ஆனை உயிர்பிப்பவர்களான அல்லாஹ்வின் தூதர்களால் மட்டுமே, இது குறித்து மறுமைநாள் வரை மீண்டும் மீண்டும் விளக்கிக் கூறமுடியும்.**

**இக்காலத்தில் என்னுடைய வருகையின் பொருட்டு, இந்த எளியவனான என்மீது அல்லாஹ் தன்னுடைய எல்லையற்ற அருளாலும், கருணையாலும் புனித திருக்குர்ஆனின் ஞானத்தை அருளியுள்ளான். மேலும், இப்புனித திருக்குர்ஆனின் விளக்கவுரைக்கு 'அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்' என்று பெயரிடுமாறும் கட்டளையிட்டுள்ளான்.**

**ஆகவே, இன்றைய உலக மக்களின் முன்பாக, திருக்குர்ஆனின் விளக்கவுரையின் முதலாவது பாகத்தை அறிமுகப்படுத்துவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், அல்லாஹ் உண்மையைத் தேடுபவர்களின் ஞானத்தை வலுப்படுத்துவதற்கும், அவர்கள் இந்த விளக்கங்களிலிருந்து நன்மை அடையும் பொருட்டு அவர்களுடைய உள்ளங்களை ஒளிரச் செய்வதற்கும், மற்றும் அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்விடம் தன்னை ஒப்படைப்பதற்கும் எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன், ஆமீன்!**

**இந்த எளியவனான என்னை "'ஈமானை உயிர்பிப்பராக' எழுப்புகின்றான்." மேலும், என் காலத்தை சேர்ந்த மக்களுக்கு திருக்குர்ஆனின் உண்மையான சாராம்சத்தையும், மற்றும் விளக்கத்தையும் அறிவுறுத்துவதும் என்னுடைய பணிகளில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான். நிச்சயமாக, இறைவனுடைய வசனங்கள்யாவும் ஒரு எல்லையற்ற ஆன்மீக கடலாக உள்ளது. இதில் அதிகமாக மூழ்குகக்கூடியவர், அவற்றிலிருந்து அதிகமாக இறைஞானத்தின் அழகை ரசித்து உணர்ந்து கொள்ளலாம்.**

# அல்-அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்

நீர் இறைஞானத்தின் மீது தாகமாய் இருக்கின்றீர்! இக்காலத்தில், அவனுடைய இறைஇருப்பு, மற்றும் இறைவெளிப்பாட்டின் ஒரு அடையாளமாக, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மாவில் இருந்து இறைஞான ஆறுகள் வேகமாகப் பெருக்கெடுத்து முன்னேறி வெளியேறுகின்றன. மனிதர்களே! மனிதகுலத்திற்கான அவனுடைய முடிவுறாத வார்த்தைகளிலிருந்து வெளிப்பட்ட அவனுடைய இறைச்செய்தியை உங்களுக்கு அளிப்பதன் மூலமாக, என்னுடைய கடமைகளை செலுத்தியதாக நீங்கள் எனக்குச் சாட்சிக் கூறுவீர்களாக! அல்லாஹ், யாருக்கு உண்மையான நேர்வழியை நாடுகிறானோ அவர்களுக்கு நேர்வழிக்காட்டுவானாக! அமீன்!

அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே,
எல்லாப் புகழும் உரியது!

**ஹஸ்ரத் முஹையுத்தீன் அல் கலீஃபத்துல்லாஹ்**

**முனீர் அஹ்மது அஸிம்**

**ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்**

**01 டிசம்பர் 201216 முஹர்ரம் ஹிஜ்ரி 1434**



# தஃப்ஸீரே கபீர்

## பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு இமாமின் தேவை உள்ளது என்று சாட்சி பகிர்ந்துள்ளார்கள்

### வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஹஜ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி)

இன்னும் நம் கட்டளையைக் கொண்டு (மக்களுக்கு) நேர்வழி காட்டும் இமாம்களாக நாம் அவர்களை ஆக்கினோம்; மேலும், நன்மையுடைய செயல்களை புரியுமாறும், தொழுகையைக் கடைப்பிடிக்குமாறும், ஜகாத்தை கொடுத்து வருமாறும், நாம் அவர் களுக்கு வஹீ மூலம் அறிவித்தோம் - அவர்கள் நம்மையே வணங்குபவர்களாக இருந்தனர். (அல்குர்ஆன் : 21:74)

மேலும் இப்ராஹீமை அவருடைய இறைவன் சில கட்டளைகளைக் கொண்டு சோதித்து, அவற்றை அவர் நிறைவேற்றிய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்). நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக்குவேன் என்று அவன் கூறினான். என் சந்ததிகளிலிருந்தும் (தலைவர்களை உருவாக்குவாயாக) என்று (இப்ராஹீம்) கேட்டார். (அதற்கு அல்லாஹ் ஆம்! எனினும்) என் வாக்குறுதி அநீதியிழைப்பவர்களைச் சேராது என்று கூறினான்(2:125)

இறைப்புறத்தில் இருந்து மாபெரும் அருளாக தோன்றும் இமாம்களை பற்றிய ஹசரத் இப்றாஹிம் (அலை) அவர்களின் ஆன்மீக சந்ததிக்கு அல்லாஹ் வழங்கிய வாக்குறுதியை பற்றி ஹசரத் முஸ்லிஹ் மவூது(ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கு- கின்றார்கள்:-

**2404. Commentary**

பரிசுத்த குர்ஆன் 2:125-ல் குறிப்பிடப் பட்டுள்ள பிரார்த்தனையை நிறைவேற்று வதற்காக இறைவன் இப்ராஹீமின் சந்ததியினரிடமிருந்து மார்க்க தலைவர்களை (இமாம்களை) தேர்ந் தெடுத்தான். தம்மைப் பின்பற்றுபவர்களிட மிருந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆன்மீக சீர்திருத்தவாதிகளை எழுப்புவது தொடர்பாக இதே போன்றதொரு வாக்குறுதியே புனித நபி(ஸல்) அவர்களுக்கும் வழங்கப்பட்டது. (நிச்சயமாக ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத் திலும் இறைவன் இந்த உம்மத்திற்கு அவர்களது மார்க்கத்தை மீட்டெடுக்கும் ஒரு சீர்திருத்த வாதியை நியமிப்பான்-அபூதாவுத்).

இந்த வாக்குறுதியானது பிரபலமான பிரார்த்தனையிலும் அடங்கி உள்ளது, அதாவது தரூதில்,

அல்லாஹ்வே! நீ (ஹஸ்ரத்) இப்ராஹீமின் மீது எவ்வாறு அருள் புரிந்தாயோ அது போன்று ((ஹஸ்ரத்) முஹம்மது(ஸல்) அவர்களின் மீதும் அருள்புரிவாயாக! ..

ஆன்மீக சீர்திருத்தவாதிகள் (ஹஸ்ரத்) இப்ராஹீமின் சந்ததியினரிடையே தொடர்ந்து தோன்றிவந்தார்கள், யூதர் களால் ஈசா (அலை) அவர்கள் நிராகரக்கப்பட்டதன் மூலம், அவர்கள் எல்லா காலத்திற்கும் அந்த அருளை இழந்து விட்டார்கள்,

**ஒவ்வொரு நூற்றாண்டின் தலைமையிலும் ஒரு முஜத்தித்தை அல்லாஹ் எழுப்பி மார்க்கத்திற்கு புத்துயிர் வழங்குகின்றான்**

# தஃப்ஸீரே கபீர்

## பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு இமாமின் தேவை உள்ளது என்று சாட்சி பகிர்ந்துள்ளார்கள்.

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஹஜ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி)**

**மேலும் மேற்கூறப்பட்ட (2:125) பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கான முன்னறிவிப்பு இஸ்மாயிலின் சந்ததிக்கு மாற்றப்பட்டது.இஸ்லாத்தை சீர்திருத்தம் செய்வதற்காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களை பின்பற்றுபவர்களிடமிருந்து ஆன்மீக தலைவர்கள் (இமாம்கள்) இப்போது எழுப்பப்படுகின்றார்கள், அவர்கள் இறுதி காலம் வரை தொடர்ந்து (அந்த சீர்திருத்தம்) செய்து கொண்டிருப்பார்கள்.தரூத்ஷரீஃபி)ல் உள்ள பிரார்த்தனையின் நிறைவேற்றமானது இப்ராஹீம்(அலை) அவர்கள் மீது ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களது மேன்மையை நிலைநிறுத்துகின்றது, ஏனென்றால் (ஹஸ்ரத்) ஈஸா நபிக்குப் பிறகு இப்ராஹீமின் சந்ததியினரிடையே ஆன்மீக தலைவர்கள் (இமாம்கள்) தோன்றுவது நிறுத்துப்பட்டு விட்டது,(தற்போது) அவர்கள் அவரை (அதாவது நபி(ஸல்) அவர்களைப்) பின்பற்றுபவர்களிடையே இந்த உலகம் நீடித்திருக்கின்ற வரை தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருப்பார்கள்**

**( ENGLISH W/ 5 VOL. COMMENTARY (2018)**
**Page no:2101-2102 )**

**இஸ்லாத்தை சீர்திருத்தம் செய்வதற்காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களை பின்பற்றுபவர்களிடமிருந்து ஆன்மீக தலைவர்கள் (இமாம்கள்) இப்போது எழுப்பப்படுகின்றார்கள், அவர்கள் இறுதி காலம் வரை தொடர்ந்து (அந்த சீர்திருத்தம்) செய்து கொண்டிருப்பார்கள்**



# நபி மொழி -ஒரு உயிரோட்டம்

### ஸஹிப் அல் ஃபரஜ் –முக்தார்ருதீன் சாஹிப் அவர்கள்

**ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 65 திருக்குர்ஆன் விளக்கவுரை 4897 மற்றும் 4898**

அறிவிப்பாளர்

**அபூ ஹுரைரா(ரலி)**




நாங்கள் (ஒரு சமயம்) நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்களுக்கு 'அல்ஜுமுஆ' எனும் (62 வது) அத்தியாயத்தில் 'இன்னும் இவர்களுடன் வந்து சேராமலிருக்கும் ஏனைய மக்களுக்காகவும் (இந்தத் தூதரை அவன் அனுப்பியுள்ளான்)' எனும் (3 வது வசனம் அருளப்பெற்றது. அப்போது, 'அந்த (ஏனைய) மக்கள் யார்? இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்டேன். நான் மூன்று முறை கேட்டும் அவர்கள் (எனக்கு) பதிலளிக்கவில்லை. எங்களிடையே சல்மான்-அல்-ஃபாரிசீ(ரலி) இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் சல்மான் மீது தம் கரத்தை வைத்தார்கள். பிறகு, கிருத்திகை (ஸுரய்யா) நட்சத்திரக் குழுமத்தின் அருகில் இறைநம்பிக்கை இருந்தாலும் 'சில மனிதர்கள்' அல்லது 'இவர்களில் ஒருவர்' அதனை அடைந்தே தீருவார்' என்று கூறினார்கள்.

அபுல் ஃகைஸ் சாலிம்(ரஹ்) அறிவித்தார் அபூ ஹுரைரா(ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பில், 'இவர்களில் சில மனிதர்கள் இதனை அடைந்தே தீருவர்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இடம் பெற்றுள்ளது.

## முதல் இதழின் தொடர்ச்சி பாகம் -2..

அன்னார் (அலை) அவர்கள் இந்த வசனத்தை பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்:-

**(மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்) என்ற (62:3)**

திருக்குர்ஆன் வசனத்தின்படி பிரதிபிம்பமான முறையில் நான் அதே காத்தமுல் அன்பியாவாக இருக்கிறேன் என்பதை நான் பலமுறையும் கூறியுள்ளேன். மேலும் இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன் நான் வெளியிட்ட பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் என் பெயரை இறைவன் முஹம்மது என்றும் அஹ்மது என்றும் கூறி, எனது வருகையை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வருகை என்றே கூறியுள்ளான்.

ஆனால் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் நபிமொழியின் அடிப்படையில் அவர்கள் பலர் என்பதும் காத்தமுள் குலபா ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவ்வாறு தோன்றுவார்கள்.

அன்னாரின் பிம்பங்கள் என்பதும் இன்னும் விளக்கமாக தோன்றக்கூடியவர்கள் ஒருவரல்ல பலர் என்பதும்அவர்கள் அனைவரும் ஹசரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பிம்பங்களாக இருப்பார்கள் என்பதும் தெளிவாகின்றது.

ஆனால் மஸீஹ் மார்கள் ஒருவர்தான் என்ற கொள்கையை நிலைநாட்ட நிஜாமிகள் இந்த நபிமொழியில் உள்ள பலர் என்பது ஹசரத் மஸீஹ் (அலை) அவர்களை பின்தொடரும் கலீபதுல்மஸீஹ்கள் தான் என்ற அடிப்படை ஆதாரம் இல்லாத ஒருநிலைப்பாட்டை முன் வைக்கின்றனர் இதற்காக அவர்கள் தோன்றக் கூடியவர்கள் சல்மான் பார்சி (ரலி) அவர்களின் பௌதிக சந்ததியாக இருப்பார்கள் என்ற இஸ்லாத்திற்க்கு முற்றிலும் ஒரு மாறுபட்ட கருத்தை முன்வைக்கின்றனர்

ஆனால் சந்ததிகளை பற்றி திருகுரானில் அல்லாஹ் குறிப்பிடும் போது

**நிச்சயமாக உமது பகைவனே ஆண் சந்ததியற்றவன்.
( திருக்குர்ஆன் 108: 4 )**

உ யி ரோ ட் ட ம் தொ ட ரு ம்



# ஒரு தந்தையாக பெருமானார் (ஸல்) அவர்கள்



முஹையதீன் அல் கலீஃபதுல்லாஹ்
முனீர் அஹ்மத் அஸிம் (அலை)

முஹம்மது என்றால் மிகவும் பாராட்டப்பட்டவர் என்று பொருள். அவர்கள் நபித்துவத்திற்கு உரிமை கோருவதற்கு முன்பே, அன்னாருடைய சொந்த மக்கள் அவர்களை உண்மையாளராகவும், நம்பகமானவராகவும் அறிந்திருந்தார்கள்.

இஸ்லாத்தின் தூய திருநபி(ஸல்) அவர்கள் மூன்று மகன்களுக்கும் நான்கு மகள்களுக்கும் தந்தையாவார்கள். காசிம் மற்றும் அப்துல்லா என்று பெயரிடப்பட்ட என்ற இரண்டு மகன்களும் தயாப் மற்றும் தாஹிர் குடும்பத்தில் ஹஸ்ரத் கதீஜா(ரலி) அவர்களிலிருந்து பிறந்தவர்கள். மற்றொரு மகன், இப்ராஹிம்,பிற்காலத்தில் அவர்களது கிறிஸ்தவ (கிப்தியா)) மனைவியாகிய ஹஸ்ரத் மரியாவிலிருந்து பிறந்தார்கள், (பின்னர் மரியா(ரலி) அவர்கள் முஸ்லீம் ஆனார்கள்). முதலில் பிறந்தவர் காசிம், அவருக்குப் பிறகு, அரபு வழக்கப்படி, புனித நபி(ஸல்) அவர்கள் தன்னை அபுல் காசிம் (அதாவது காசிமின் தந்தை) என்று அழைத்தார்கள், காசிம், இஸ்லாத்தின் வருகைக்கு முன்னரே, தமது இரண்டாவது வயதில் மரணித்து விட்டார். காசிமுக்கு அடுத்தபடியாக (பிறந்தவர்) அவர்களது மூத்த மகள் ஜைனப் என்ற பெயர் கொண்டவர் ஆவார்கள். அவருக்கு அடுத்ததாக மகள்கள் ருகைய்யா, உம்மு குல்ஸூம், மற்றும் அனைத்து மகள்களிலும் இளையவராக பாத்திமா இருந்தார்கள். புனித ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களுக்கும், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கும் இளைய சந்ததியாக (ப் பிறந்தவர்) அப்துல்லாஹ் ஆவார்கள், அவர் இஸ்லாத்தின் வருகைக்கு முன்னரே குழந்தைப் பருவத்தில் காலமானார்கள்.

ஹஸ்ரத் கதீஜா(ரலி) தனது முந்தைய கணவர்களிடமிருந்து இரண்டு குழந்தைகளைப் பெற்றார்கள், ஒருவரிடமிருந்து ஒரு மகனையும், மற்றொருவரிடமிருந்து ஒரு மகளையும் பெற்றார்கள், இருவரும் ஹிந்த் என்று அழைக்கப்பட்டனர். வெளிப்படையாக, (அந்த) குழந்தைகள் தங்கள் தந்தையின் அந்தந்த குடும்பங்களுடன் தங்கியிருந்தாலும் கூட, பாசத்தையும் பரிசுகளையும் பெற்றுச் செல்ல,அவ்வப்போது (ஹஸ்ரத் கதீஜா(ரலி)) அவர்களைப் பார்த்து செல்ல வருகை தந்தார்கள்.

மகன், ஹிந்த் இப்னு அபி ஹலா அவர்கள் தனது மாற்றாந் தந்தையாகிய நபி(ஸல்) அவர்களுடன் அதிகம் ஒன்றியிருந்ததாகத் தெரிகிறது, பிற்காலத்தில் அவர் இஸ்லாத்தில் இணைந்தபோது, புனித நபி (ஸல்) அவர்களைப் பற்றி மிகவும் ஆர்வத்துடன் (இவ்வாறு) எழுதினார்: “(நபி(ஸல்)) அவர்களது வாய் முத்துக்கள் நிறைந்த மாணிக்கங்களின் பெட்டகம் போல இருந்தது, அது நிரம்பியபோது சந்திரனைவிடவும் அவர்களது முகமே மிகவும் அழகாக இருந்தது… ” இது சிறிதும் சந்தேகமற்ற (நபி(ஸல்) உடனான) அவரது நெருக்கத்தையும், அசாதாரணமான அவரது அன்பையும் மரியாதையையும் பிரதிபலிக்கின்றது.

அரபுகளின் வழக்கத்தின்படி, ஜைத் பின் ஹாரிஸ் விற்பனைக்கு வந்தபோது, புனித நபி(ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜாவை வாங்குமாறுக் கேட்டுக்கொண்டார்கள். எனவே ஜைத் பின் ஹாரிஸ் வாங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். பின்னர் புனித நபி(ஸல்) அவர்களும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும் அவரைத் தங்களது (வளர்ப்பு) மகனாக ஏற்றுக்கொண்டனர், பின்னர் அவர் ஜைத் பின் முஹம்மது என்று அறியப்பட்டார். அவர் நபிகள் நாயகத்தின் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்து, ஒரு பிரசித்திபெற்ற உண்மையான ஸஹாபியாகவும், நம்பிக்கை கொண்டவராகவும் ஆனார்கள்.

மூத்த மகளான ஹஸ்ரத் ஜைனப் அவர்கள்,அபுல்-ஆஸ் பின் ரபீ பின் அப்த்ஷம்ஸ் அவர்களை மணந்தார்கள்.





# ஒரு தந்தையாக பெருமானார் (ஸல்) அவர்கள்



முஹையதீன் அல் கலீஃபதுல்லாஹ்
முனீர் அஹ்மத் அஸிம் (அலை)

ஹஸ்ரத் ருகைய்யா அவர்களும் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் அவர்களும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் மாமா அபூலஹபின் மகன்களான உத்பா மற்றும் உதைபாவை மணந்தார்கள்.காலம் சென்றதும் அவர்கள் இஸ்லாத்தின் தூதராக தன்னைபிரகடனப்படுத்தினார்கள்,ருகைய்யா மற்றும் உம்மு குல்ஸூம் ஆகிய அவர்களின் மகள்களை விவாகரத்து செய்யும்படி அபூலஹப் தனது மகன்களை இணங்கச்செய்தார். பின்னர் இரு சகோதரிகளும் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் அவர்களை ஒன்றன் பின் ஒன்றாக முதல் திருமணமானவரின் மரணத்திற்குப் பிறகு இருவரும் (அடுத்தடுத்து) மணந்துகொண்டனர். மகள்கள் இருவருமே ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களது வாழ்நாளிலேயே மரணித்தனர். இளையவரான ஹஸ்ரத் பாத்திமா அவர்கள் ஹஸ்ரத் அலி(ரலி) அவர்களை மணந்தார்கள். மேலும் அவர்கள் மட்டுமே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகும் வாழ்ந்த ஒரே குழந்தையாவார்கள்.அவர்களது தந்தையின் மரணத்தால் (ஏற்பட்ட) துக்கத்தினால் ஆழமாக பாதிக்கப்பட்டு அந்த நிகழ்வின் விளைவாக ஆறு மாதங்களுக்குள் அவர்கள் மரணம் அடைந்தார்கள்.எல்லாம் வல்ல அல்லாஹ் இஸ்லாத்தின் புனித நபி(ஸல்) மற்றும் எகிப்து கிருஸ்தவ வம்சாவளியைச் சேர்ந்த அவர்களது மனைவி ஹஸ்ரத் மரியா அவர்களுக்கும் இப்ராஹிம் என்ற மகனை அளித்து அருள்புரிந்தான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இது ஒரு பரவசமான சந்தர்ப்பமாக இருந்தது. பிறந்தகுழந்தை மீது அவர்கள் தனது பாசத்தை வெளிப்படுத்தியது என்பது இயல்பானதே.குழந்தையின் தாயார் ஹஸ்ரத் மரியாவும் புனித நபி(ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தார்கள். ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் மருத்துவம் பார்த்த அபூ ரஃபீயின் மனைவி ஸல்மாவுக்கும் தாராளமாக வெகுமதியை வழங்கினார்கள்.




அன்னாரது முந்தைய இரண்டு மகன்கள், அல் காசிம் மற்றும் அப்துல்லா ஆகியோரை சிறு பிராயத்திலேயே இழந்ததினால் இக்குழந்தையுடன் அவர்களுக்கு ஒரு வலுவான இணைப்பு இருந்தது ஆகவே இக்குழந்தையின் பிறப்பை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். அவர்களது மகள்கள், முதிர்ச்சியடைந்த பிறகு, திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றார்கள், ஆனால் அவர்களது அனைத்து சந்ததியினரிலும் பாத்திமா மட்டுமே மற்றவர்களைக் காட்டிலும் (நீண்ட ஆயுளுடன்) எஞ்சியிருந்தார்கள்.அன்னாரின் மகன்களும், மகள்களும் ஒருவர் பின் ஒருவராக மரணித்து அன்னாரின் கரங்களாலே அடக்கம் செய்யப்பட்டது அவர்களுக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. எனவே, இத்தகைய(நிலையில்) மிகவும் துயரமடைந்த ஒரு தந்தை இப்ராஹிமின் பிறப்பின் போது மிகவும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்தார்கள். அந்தோ!, இப்ராஹிமால் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் அடைந்த மகிழ்ச்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை.விரைவில், குழந்தை கடுமையாக நோய்வாய்ப்பட்டது. அவர் மஷாபத்து உம்-இ-இப்ராஹிம்-க்கு அருகிலுள்ள ஒரு பேரீச்சம்பழத்தோட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவரதுதாயும் அவரது தாயின் சகோதரியான ஸிரினும் அவரை கவனித்து வந்தனர். அவரது நிலை மோசமடைந்து,அவர் நீண்ட காலம் வாழமாட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தபோது, (எம்பெருமானார்) ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களுக்கு செய்தி அறிவிக்கப்பட்டு அழைக்கப்பட்டார்கள். அன்னார் அச்செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார்கள்.



# ஒரு தந்தையாக பெருமானார் (ஸல்) அவர்கள்



முஹையதீன் அல் கலீஃபதுல்லாஹ்
முனீர் அஹ்மத் அஸிம் (அலை)

(அதன் விளைவால்) அவர்களது முழங்கால்களுக்கு இனி அவர்களை சுமக்கும் (திறன்) இல்லை என்பதை உணர்ந்தபோது, அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள் மீது சாய்ந்து கொள்வதற்காக அவரது கையை கொடுக்குமாறு கேட்டார்கள்.புனித நபி(ஸல்) அவர்கள் உடனடியாக தனது மனைவி மரியாவின் வசிப்பிடத்திற்குச் சென்று அத்தாயின் மடியில் மரணிக்கப்போகும் குழந்தைக்கு பிரியா விடை கொடுக்க வந்திருந்தார்கள். இச்சோகத்தால் அன்னாரின் இதயம் சுக்குநூறாக உடைந்து அவர்களது முகம் அன்னாரின் வலியைப் பிரதிபலித்தது.துக்கத்துடன் மூச்சுத் திணறி, அவர்கள் தனது மகனிடம்: "இப்ராஹிமே!, இறைவனின் தீர்ப்பிற்கு எதிராக, எங்களால் உமக்கு (எந்த) ஒரு காரியத்தையும் பெற்றுத் தர முடியாது", பிறகு அவர்கள் அமைதியாகிவிட்டார்கள்.அன்னாரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. நேரம் செல்ல செல்ல குழந்தையின் உடல் நிலை மோசமடைந்தது, அவரது தாயாரும் சிறிய தாயாரும் சத்தமாகவும் இடைவிடாமலும் அழுது கொண்டே இருந்தனர். ஆனால் புனித நபி(ஸல்) அவர்கள் அழுகையை நிறுத்துமாறு அவர்களிடம் கூற வில்லை. இப்ராஹிம் மரணிக்கும் தருவாயில் புனித நபி(ஸல்) அவர்களது கண்களில் கண்ணீருடன் குழந்தையிடம் இவ்வாறு உரையாடினார்கள்," இப்ராஹிமே! எங்களில் இறுதியானவர், முதலாமவருடன் இணைவார்கள் என்ற உண்மையில் உறுதியாக இருக்கவில்லை என்றால், இப்போது கடைபிடிப்பதைவிட நாங்கள் உங்களுக்கு இன்னும் அதிகமாக துக்கம் கடைபிடித்திருப்போம்" சிறிதுநேரம் கழித்து, 'கண்கள் அதன் கண்ணீர் வடிக்கின்றன; உள்ளம் வேதனைக்குட்படுகிறது; நமது இறைவன் பொருந்திக்கொள்ளாத எதையும் நாம் கூற மாட்டோம். இப்ராஹீமே! எங்களிடமிருந்து உமது பிரிவுக்காக நாங்கள் துக்கமடைகிறோம்' என்று கூறினார்கள்.

(எம்பெருமானார்) ஹஸ்ரத் நபி முஹம்மது(ஸல்) அவர்கள் தங்களின் துயரத்தை அடக்கி துக்க சுமையை குறைக்க முயன்றார்கள். ஹஸ்ரத் மரியாவையும் அவரது சகோதரியான ஸிரினையும் நோக்கியவாறு"சொர்க்கத்தில் (பால் கொடுக்க) இப்ராஹிம் தனது சொந்த செவிலியரைப் பெற்றிருப்பார்" என்று அவர்களிடம் ஆறுதல் கூறினார்கள்.

உம்-இ-பர்தா, அல்லது மற்றொரு பதிப்பின் படி, அல்-ஃபஸ்ல் இப்னு அப்பாஸ்அவர்கள் அடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடாக குழந்தையின் உடலைக்குளிப்பாட்டினார்கள்.அவர் ஒரு சிறிய படுக்கையில் பரிசுத்த நபி(ஸல்) மற்றும் ஏராளமான முஸ்லிம்களால் 'அல்-பகீ' கல்லறைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு, தூய நபி(ஸல்) அவர்களின் பிரார்த்தனைக்குப் பிறகு,அன்னாருக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. எம்பெருமானார் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் கல்லறையை மூடுமாறு கட்டளையிட்டார்கள்.அவரகள் அதை மணலைக் கொண்டு நிரப்பி,சிறிது தண்ணீர் தெளித்து மேலும் ஒருகல்லையும் நாட்டினார்கள். பின்னர் அவர்கள் கூறினார்கள்:"கல்லறைகற்கள் நல்லதையோ அல்லது தீயதையோ செய்யாது ஆனால் அவை உயிருள்ளவர்களை சமாதானப்படுத்த உதவுகின்றன. மனிதன் செய்கின்ற சிறிதளவு (நன்மை)க்கும், இறைவன் அவருக்கு நன்மையை நாடுகின்றான். "

"இப்ராஹிமே!, இறைவனின் தீர்ப்பிற்கு எதிராக, எங்களால் உமக்கு (எந்த) ஒரு காரியத்தையும் பெற்றுத் தர முடியாது", பிறகு அவர்கள்அமைதியாகிவிட்டார்கள்.

# ஒரு தந்தையாக பெருமானார் (ஸல்) அவர்கள்

**முஹையதீன் அல் கலீஃபதுல்லாஹ்**
**முனீர் அஹ்மத் அஸிம் (அலை)**

பரிசுத்த நபி(ஸல்) அவர்கள் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது: "இப்ராஹிம் உயிரோடு இருந்திருந்தால், அவர் ஓர் உண்மையான நபியாக இருந்திருப்பார்"(கன்ஸுல் உம்மால்). இப்ராஹிமின் மரணம் ஒரு சூரிய கிரகணத்துடன் ஒத்துப்போன ஒரு இயற்கை காட்சியை முஸ்லிம்கள் ஒரு வியத்தகு நிகழ்ச்சியாக பார்த்தார்கள். இப்ராஹீமின் மரணத்தின் மீது சூரியன் சோகத்தால் கிரகணம் அடைந்ததாக அவர்கள் கூறிக் கொண்டாகள். தூய நபி (ஸல்) அவர்கள் அதைக்கேட்டு (இவ்வாறு) கூறினார்கள், "சூரியனும் சந்திரனும் இறைவனின் அத்தாட்சிகள். எந்தவொரு மனிதனின் மரணத்திற்கோ அல்லது பிறப்பிற்கோ அவை கிரகணம் அடைவதில்லை. ஆகவே, ஒரு கிரகணத்தைக் காணும்போது, இறைவனை நினைவில் கொண்டு அவனிடம் பிரார்த்தனையின் பக்கம் திரும்புங்கள். "

அல்லாஹ் நம்முடைய பரிபூரண முன்மாதிரியும் இறைத்தூதருமாகிய எம்பெருமானார் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களது தோழர்கள் மீதும் எப்போதும் மகிழ்ச்சியடைந்து அவர்களை நேசிப்பானாக!, மேலும் கருணை மற்றும் அன்பின் கண்களைக் கொண்டு அவர்களுடைய உம்மத்தின் மீதுஅருள் புரிவானாக!,இன்னும் நமது அன்பான எஜமானர்(ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம் இஸ்லாத்தின் மகிமையை மீண்டும்கொண்டு வர நமக்கு உதவி செய்வானாக!.

**ஆமீன்!!!**

**---Friday Sermon of 01 December 2017**
**(12 Rabi'ul Awwal 1439 AH delivered by Hazrat Khalifatullah Munir A. Azim (atba) of Mauritius**
**http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2017/fseng_01dec17.pdf**







# தொழுகையில் இன்பம்

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை)

### முதல் இதழின் தொடர்ச்சி பாகம் -2..

தொழாதவர்கள், தொழுகையை ஒரு தண்டனை யாகக் கருதுகிறார்கள். அவசியமில்லாமல் அதிகாலைக் குளிரில் எழுந்து, உளூ செய்து, இன்பமான தூக்கத்தை விட்டுவிட்டு ஏன் தொழ வேண்டும் என்று நினைக்கின்றனர்.

ஒரு குடிகாரனுக்கு போதுமான அளவிற்குப் போதை வரவில்லை என்றால், மேன்மேலும் குடித்துக் கொண்டே இருக்கின்றான். அறிவுள்ள ஒரு நல்ல மனிதர் இதிலிருந்து நல்ல பாடத்தை கற்றுக் கொள்ளலாம். அதாவது தொழுகையைத் தொடர்ந்து தொழ வேண்டும்; அவருக்கு அதில் இன்பம் கிடைக்கும் வரை தொழுது கொண்டே இருக்க வேண்டும். குடிகாரனுக்கு ஒரு வகை இன்பத்தை பெறுவதே குறிக்கோளாக இருப்பது போன்று, வணங்குபவரும் தமது எல்லா சக்தி களையும் பயன்படுத்தி வணக்க த்தில் இன்பத் தை பெறும் குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். குறைந்த பட்சம், குடிகாரனின் ஆசையையும், துடிப்பையும் போன்று வணங்குபவர், வணக்கத்தில் இன்பத்தைப் பெற்றே தீர வேண்டும் என்ற ஆர்வத்துடனும் துடிப்புடனும் பிரார்த்தனை செய்தால், அவருக்கு இன்பம் கிடைத்துவிடும் என்று உறுதியாக கூறுகின்றேன்.

தொழுகையினால் கிடைக்கும் பயன்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும். தொழுகைகள் தீமைகளை அழித்துவிடுகின்றன என்று இறைவன் கூறியுள்ளான். திருக்குர்ஆனின் இன்னோரிடத்தில் நிச்சயமாகத் தொழுகை வெட்க்கேட்டிலிருந்தும் பகிரங்கமான தீமையி லிருந்தும் தடுக்கின்றது என்று இறைவன் கூறுகின்றான்.

ஆனால் தொழுது வருபவர்கள் கூட தீமைகளைச் செய்கின்றனர். இதனை நாமெல்லாரும் காண்கிறோம். இதற்குக் காரணம், அவர்கள் தொழுகின்றார்களென்றா லும் அவர்களின் ஆன்மா தொழவில்லை. உண்மையான தொழுகையை அவர்கள் நிறை வேற்றவில்லை.



**ஆன்மா ஊற்று நீர் போன்று இறைவனை நோக்கி செல்கிறது. அந்த ஆன்மாவுக்கு இறைவன் அல்லாதவர்களுடனுள்ள தொடர்பு முழுமையாக அறுந்து விடும் போது இறைவனுடைய அன்பு அதற்குக் கிடைக்கிறது. இந்த நிலையில் மனிதனின் ஆர்வமும், இறைவனின் ஆர்வமும் சேர்ந்து ஒரு புதுமையான நிலையை உருவாக்குகிறது.இதற்கு பெயரே தொழுகை.**

சடங்கு சம்பிரதாயமாகத் தரையில் முட்டி முட்டி எழுகின்றார்கள்.

அவர்களின் ஆன்மா மரணமடைந்திருக்கிறது. தொழுகையை அதற்குரிய நிபந்தனைகளுடன் ஒருவர் நிறைவேற்றும்போது, அது அவரது ஏனைய தீமைகளை அழித்து விடுகிறது. தொழு கையில், உட்காருதல், நெற்றியை கீழே வைத்தல் முதலிய செய்கைகளுடன், ஆன்மாவும் சேர்ந்து முழுமையான பணிவுடன் செயல்படுமானால் இன்பம், மகிழ்ச்சி, ஒளி, அமைதி முதலியவை கிடைக்கும்.

இதனை இன்னும் தெளிவாகக் கூறிவிடுகின்றேன். ஒருவர் எத்தனையோ நிலைகளைக் கடந்து தான் மனிதன் ஆகின்றான். அதாவது அவன் விந்துதுளி நிலைக்கு வருவதற்கு முன்னால்,

# தொழுகையில் இன்பம்

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை)



பல்வேறு வகையைச் சேர்ந்த பொருட்களாக இருந்தான்; பின்னர் விந்து துளியானான் இதில் பல்வேறு நிலைகளை கடந்த பின்னர், குழந்தையானான். பிறகு வாலிபனானான். அடுத்து முதியவன் ஆகின்றான். இந்த நிலைகளை எல்லாம் கடந்து செல்லும் மனிதன், இறைவனுடைய ருபூபிய்யத் என்னும் வளர்ப்பை ஒவ்வொரு நேரமும் நினைத்துப் பார்த்தால் தன்னை இறைவனுக்கு அடிமையாக்குவதற்குத் தகுதி பெற்றவனாக ஆகிவிடுவான். இதன் மூலம் நான் உங்களுக்குத் தெரிவிக்கும் கருத்து என்னவென்றால், நம்மை முற்றிலும் அடிமையாக்கிக் கொண்டு இறைவனுக்கும் நமக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதனால் மட்டுமே தொழுகையில் இன்பமும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இறைவனுக்கு முன் நம்மை நாம் ஒன்றுமில்லாதவர்களாக ஆக்கிக் கொள்ளா தவரை உயர் தரமான இன்பத்தை பெற இயலாது. மனிதனுடைய ஆன்மா இறைவன் முன்நிலையில் முழுமையாக பணியும் போது அந்த ஆன்மா ஊற்று நீர் போன்று இறைவனை நோக்கி செல்கிறது. அந்த ஆன்மாவுக்கு இறைவன் அல்லாதவர்களுடனுள்ள தொடர்பு முழுமையாக அறுந்து விடும் போது இறைவனுடைய அன்பு அதற்குக் கிடைக்கிறது. இந்த நிலையில் மனிதனின் ஆர்வமும், இறைவனின் ஆர்வமும் சேர்ந்து ஒரு புதுமையான நிலையை உருவாக்குகிறது.

இதற்கு பெயரே தொழுகை. இத்தகு தொழுகை தான் தீமைகளைப் பஸ்பமாக்கி அழிக்கிறது. இது தான் ஒரு பிரகாசத்தை நமக்கு வழங்குகிறது. இத்தகைய வணக்கத்தை கொண்ட வர்களுக்கு ஆபத்துகளின் போது இந்த வெளிச்சம், அவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகின்றது. இதனைக் குறித்தே, நிச்சயமாக தொழுகை, வெட்கக் கேட்டிலிருந்தும், பகிரங்கமான தீமைகளிலிருந்தும் தடுக்கின்றது என்று இறைவன் கூறுகின்றான்.

இத்தகைய தொழுகையை கொண்டவர்களின் உள்ளங்களில் பிரகாசமான விளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்படுகின்றது. எவர்கள் முழுமையாக இறைவனுக்கு பணிந்து, இறைவனுக்காக எவ்வளவு இழிவடைந்து, அவன் கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கின்றார்களோ, அவர்களுக்கே இந்த பாக்கியம் கிடைக்கும்.

**இறைவனுக்கு முன் நம்மை நாம் ஒன்றுமில்லாதவர்களாக ஆக்கிக் கொள்ளா தவரை உயர் தரமான இன்பத்தை பெற இயலாது.**

இது கிடைத்த பின்னர் தீமை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவது சாத்தியமில்லாமல் ஆகிவிடும். தீய எண்ணம் ஏற்பட முடியாத நிலை வந்துவிட்டால், தீமைகளை செய்வது எங்ஙனம்? பாவமானவற்றின் பக்கம் அவர்களின் பார்வை செல்லவே முடியாமலாகிவிடும். இத்தகையவர்களுக்கு கிடைக்கும் இன்பத்தைப் பற்றி சொற்களால் விவரிக்க என்ன முடியவில்லை.

நினைவில் வைத்துக் கொள்ளத்தக்க விஷயம் ஒன்று உள்ளது. சரியான பொருளில் தொழுகை என்பது துஆ என்னும் வேண்டுதலால் நிகழ்வதாகும். இறைவன் அல்லாதவர்களிடத்தில் வேண்டுவது நம்பிக்கை கொண்டவர்களின் ரோஷத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

# தொழுகையில் இன்பம்

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை)

ஒருவர் மிகவும் தாழ்மையோடு இறைவனிடம் மட்டும் வேண்டாதவரை, அவர் உள்ளபடி உண்மையான முஸ்லிமும் அல்லர். உண்மையான நம்பிக்கையாளர் என்று சொல்வதற்கும் தகுதி பெற்றவருமல்லர்.

இஸ்லாத்தின் சரியான பொருள் என்னவென்றால், இதனை தழுவியவரின் உள்ளும், புறமும் அமைந்திருக்கின்ற எல்லா சக்திகளும் இறைவன் முன் அற்பணமாகியிருத்தல் வேண்டும். ஓர் இன்ஜின் இரயில் பெட்டிகளை இழுத்து செல்வதைப் போன்று ஒரு மனிதர் தமது எல்லா எண்ணங்களையும் செயல்களையும் தொழில்களையும் இறைவன் என்ற இன்ஜினுக்கு கீழ் அமைத்துக் கொள்ளாத வரை அவர் இறைவனின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவராக இருக்க முடியாது. நான் எனது கவனத்தை, எல்லா வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் பக்கமாகத் திருப்பிவிட்டேன் என்று ஒருவர் சொல்லும் போது, உண்மையிலேயே அவர் அவ்வாறு திருப்பி விட்டார் என்றால், ஐயமின்றி அவர் முஸ்லிமும் முஃமினும் (நம்பிக்கையாளர்) ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவரும் ஆவார்.



ஆனால் எவர் இறைவனிடமட்டுமல்லாமல், மற்றவர்களிடமும் வேண்டுகின்றாரோ, அவர் மிகவும் துர்பாக்கியசாலியேயாவார். இது தொழுகையை விட்டுவிடுவதற்கும், வணக்கத்தில் சோர்வு ஏற்படுவதற்கும் காரணமாக அமையும். ஏனென்றால், ஒரு மரத்தின் கிளைகளை ஆரம்பத்தில் ஒரு பக்கமாகச் சாய்ந்து வளருமாறு செய்தால் அது அப்பக்கமே சாய்ந்து வளர்ந்து உறுதியாகிவிடுவது போன்று ஒருவர் அல்லாஹ் அல்லாதவைகளுக்கும் பணிந்தால், மனதின் சக்திகளும், ஆன்மாவின் சக்திகளும் அவற்றின் பக்கமே முழுமையாக சாய்ந்துவிடும். மேலும் இறைவன் புறமிருந்து ஒரு கடின தன்மை அவருடைய உள்ளத்தில் உருவாகி, அவ்வுள்ளத்தை உறைந்ததாகவும் கல்லைப்போன்றதாகவும் ஆக்கி விடும். அம்மரக்கிளைகளை மறுப்பக்க மாகத் திருப்ப முடியாமல் ஆகிவிடுவது போன்று, அவருடைய உள்ளமும், ஆன்மாவும் நாளுக்கு நாள் இறைவனை விட்டு தூரம் விலகிக் கொண்டே போகும். எனவே ஒருவர் இறைவனை விட்டு விட்டு மற்றவர்களிடம் வேண்டுவது, மிகவும் பயங்கரமானதும், அபாயகரமானது மாகும்.

(Malfuzat — Volume I Page 156-159)

**நான் எனது கவனத்தை, எல்லா வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் பக்கமாகத் திருப்பிவிட்டேன் என்று ஒருவர் சொல்லும் போது, உண்மையிலேயே அவர் அவ்வாறு திருப்பி விட்டார் என்றால், ஐயமின்றி அவர் முஸ்லிமும் முஃமினும் (நம்பிக்கையாளர்) ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவரும் ஆவார்.**

இன்ஷாஅல்லாஹ் தொடரும்.....



# அல்லாஹ்வின் கலீஃபாவிடம்மிருந்து ஒரு தூது செய்தி

## இறைவஹீ ,அறிவுரைகள் மற்றும் எச்சரிக்கைகள்

ஹஸ்ரத் கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (atba)

(11 MARCH 2020 * 16 RAJAB 1441 AH)




**எனது அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே! குழந்தைகளே!**

**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு**
**(சாந்தி, கருணை மற்றும் இறைவனின் அருள்கள் உங்கள் மீது நிலவட்டுமாக!)**

அல்ஹம்துலில்லாஹ் மார்ச் 08, 2020 அன்று லுஹர் மற்றும் அஸர் ஸலாத் (தொழுகைக் குப்)பின்னர்,என்னைப்படைத்தவனுடனான பல துஆக்களுக்குப் பிறகு அல்லாஹ் (துபாரக்) எனக்கு பல இறைவெளிப்பாடு களை வழங்கியுள்ளான். இந்த வெளிப்பாடு களானது என்னை துன்பத்திற்குள்ளாக்கிய பல கடினமான சோதனைகளுக்கும்,(அதன் காரணமாக) என்னுடைய உடல் நலம் பாதிப்படைந்ததற்கும் பிறகு வெளிப்படுத்த ப்பட்டன; அவற்றையெல்லாம் நினை த்து , என் கண்களில் கண்ணீர் மல்க, நான் அல்லாஹ்வை வேண்டி அவனுடைய ஒப்ப ற்ற (அசாதாரணமான) உதவியை நாடினேன் .பிறகு நான் ஒரு பலவீனமான நிலையில் வீழ்ந்து விட்டேன். இந்த நிலையில் தான், அல்ஹம்துலில்லாஹ் ஸும்ம அல்ஹம்து லில்லாஹ், சர்வவல்லமையுள்ள இறைவன், ஒர் அசாதாரணமான வாசனையை வெளிப் படுத்துவதன் மூலமும் சமஸ்கிருதத்தில் வார்த்தைகளை வெளிப்படுத்தியதன் மூல மும் எனக்கு தைரியத்தை வழங்கினான் .இந்த நறுமணம் வெளிப்பட்ட பொழுது, நான் புகைப்படலத்தையும் கண் டேன், அதன் பிறகு தான், இந்த வெளிப்பாடுகள் சமஸ்கிருதத்தில் என் முன்னால் தோன்றியது:



# அல்லாஹ்வின் கலீஃபாவிடம்மிருந்து ஒரு தூது செய்தி

## இறைவஹீ ,அறிவுரைகள் மற்றும் எச்சரிக்கைகள்

ஹஸ்ரத் கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (atba)

**(1) யவத் ஸ்தஸ்யந்தி ஜிராயா சரிதாஷ் சா மஹிதலே தவாத் ராவத் பகவான் கதா லோகேஷு ப்ரச்சரிஷ்யதி.**

**பூமியின் மீது மலைகளும் ஏரிகளும் இருக்கின்ற வரை, சர்வவல்லமையுள்ள இறைவன் இந்த உலகத்தில் தொடர்ந்து (அவனது) ஒளியை அனுப்புவான்.**



**(2) அஸடோ மா ஸட் கமாயா, தமாஸோ மா ஜ்யோதிர் கமாயா, மிரித்யர்ம அம்ரிதம் கமாயா.**

**உண்மையற்றவற்றிலிருந்து என்னை சத்தியத்தின் பக்கம் வழிநடத்துவாயாக!, இருளில் இருந்து ஒளியின் பக்கம் வழிநடத்துவாயாக! மரணத்திலிருந்து என்னை நித்தியதின் (முடிவில்லா வாழ்வின்) பக்கம் வழிநடத்துவாயாக!,**

**பின்னர் அல்லாஹ் எனக்கு (இவ்வாறு) வெளிப்படுத்தினான்: "அல்லாஹ் (அவனே எந்தத்) துணையும் இன்றி அவனது கலீஃபாவைத் தேர்வு செய்கிறான், அது மனிதனால் அல்ல. இது அல்லாஹ்வின் அருளாகும்; (அது) அதற்கு தகுதியான வருக்கு உரியதாகும்.அல்லாஹ்(தபாரக்வதாலாவால்) தேர்ந்தெடுக்கபட்ட ஃகலீஃபா வாழ்விற்காக (உயிர் கொடுப்பவர்) ஆவார்.(அவனது) கட்டளை பற்றிய (எந்த ஒரு) கேள்வி(யும்) கூட எழுவதில்லை."**

**"மனிதர்களின் கைகள் செய்த செயல்களின் காரணத்தால் கடலிலும் நிலத்திலும் குழப்பம் தோன்றியுள்ளது. (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்களின் செயல்களுல் சிலவற்றை அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்".(திருக் குர்ஆன் ஸூ ரா அர் ரூம் அத்.30:வச.42)**



# அல்லாஹ்வின் கலீஃபாவிடம்மிருந்து ஒரு தூது செய்தி

## இறைவஹீ ,அறிவுரைகள் மற்றும் எச்சரிக்கைகள்

ஹஸ்ரத் கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (atba)

## கொரோனா வைரஸ்




இந்த நூற்றாண்டின் தொடக்கத்தின்போது, 'மனிதகுலம் ஆபத்தில் உள்ளது, அதனால் மனிதகுலத்தின் மீது பொதுவாக ஒரு கொடிய வைரஸ்(கிருமி) விழும்(அதாவது தாக்கும்) என்று அல்லாஹ்(சுப்ஹான) பல முறை (எனக்கு) வெளிப்படுத்தினான். 2002 முதல் 2003 ஆம் ஆண்டு வரை, மனிதகுலத்தையும் அதுவும் குறிப்பாக நம்பிக்கையாளர்களை துன்புறுத்தியவர்களையும் எச்சரிக்க மீண்டும் மீண்டும் கலீஃபத்துல்லாஹ்விற்கு (அதாவது இந்த எளிய அடியானுக்கு) இறைவெளிப்பாடு வந்தது. இன்று நாம் அறிந்த (இவ்) உலகம் முந்தைய நூற்றாண்டின் உலகத்திலிருந்தும் மிகவும் வேறுபட்டுள்ளது. உலகம் எல்லாத் துறைகளிலும் முறையாக வெளிப்பட்டு, வளர்ச்சி அடைந்து அத்துடன் இறைவனின் திருப்திக்கு வழிவகுக்கும் பாதையிலிருந்தும் மக்கள் விலகிச் சென்று விட்டார்கள்.

அவர்கள் தூய்மை மற்றும் நல்லொழுக்கத்தின் வரம்புகளை மீறிவிட்டார்கள்; புனிதப்படுத்த ப்பட்டுள்ள சட்டங்களை முறித்துவிட்டார்கள் மேலும் இவ்வுலக பொருட்களின் மீது இந்நாள் வரை மிகுந்த நேசத்துடனும், தற்பெருமையுடனும் சுய திருப்தியுடனும் கூடியதொரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.இவை அனைத்துமே அவனது பார்வையின் கீழ் இறைக் கட்டளை களைப் புறக்கணிப்பதன் மூலமும், பெருங்கொடுமையான செயல்களைச் [அதாவது கடுமையான குற்றங்களைச்] செய்வதன் மூலமும், ஒரு வெளிப்படையான கிளர்ச்சி மற்றும் வெட்கமில்லாத இழிசெயல்களினால் அவனை புண்படுத்தியதன் காரணத்தினாலேயே ஆகும்.

மக்களின் பௌதீக மற்றும் மார்க்க நல்வாழ்வை நெறிப்படுத்துவதற்காக இறைவன் அனுப்புகின்ற அவனது (வழிகாட்டும்) தலைவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் மீது இறைவனின் பழிவாங்குதல் (தகுந்த தண்டனை) விதிக்கப்படுகின்றது.இந்த மக்கள் கிளர்ச்சி செய்வதோடு கட்டளைகளையும் தகர்த்து (பயனற்றதாக்கி) விடுகின்றார்கள்.அவர்கள் சட்டவிரோதம், அநீதி மற்றும் கர்வத்துடன் செயல்படுவதன் மூலம் எதிர்ப்பு மற்றும் விரோதத்தைக் கொண்டு முன்னேற்றத்தை குறைத்து விடுகின்றார்கள்.அவ்வாறு செயல்படுமபோது, இறைவனால் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு தொடர்பையும் துண்டித்துவிடுகின்றார்கள். மேலும் சர்வ வல்லமையுடையவனின் எல்லையற்ற ஞானத்துடன் கொண்டு வந்துள்ளவற்றை நிராகரித்துவிடுகின்றார்கள்.

